Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, ஜூலை 03, 2024 இதழ் 81

# தேர்தல் தோல்வியை ஏற்க எதிர்க்கட்சிகள் மறுக்கின்றன அடுத்த 20 ஆண்டுக்கும் பா.ஜ.க. ஆட்சி தான்: நாட்டு மக்கள் எங்கள் மீது மட்டுமே நம்பிக்கை வைத்துள்ளனர் - பிரதமர் மோடி

சென்னை, 03 ஜூலை 2024: நாட்டில் அடுத்த 20 ஆண்டுக்கும் பா.ஜ.க. தான் ஆட்சி செய்யும் என பிரதமர் மோடி ராஜ்யசபையில் உறுதிப்பட கூறினார்.

நாட்டு மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்; எங்கள் மீது மட்டுமே என்றும் அவர் கூறினார்.

மாநிலங்களவையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பிரதமர் மோடி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

ஜனாதிபதியின் உரை, நாட்டு மக்களுக்கு உத்வேகமும் ஊக்கமும் அளிக்கக்கூடியதாக இருந்தது. இந்த உரையில் நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து அம்சங்களும் இடம்பெற்று இருந்தன.

ஜனாதிபதி உரை மீதான விவாதத்தில் கடந்த இரண்டரை நாட்களில் சுமார் 70 எம்.பி.க்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். எம்.பி.க்களாகிய நீங்கள் அனைவரும் இந்த விவாதத்தை செழுமைப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேசிய ஜனநாயக கூட்டணியை நம்பி, 3வது முறையாக ஆதரவு அளித்து உள்ளனர். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் கொடுத்த வெற்றியை எதிர்க்கட்சிகளால் ஜீரணிக்க முடியவில்லை.

நாட்டில் 60 வருடங்களுக்கு பிறகு தொடர்ந்து 3வது முறையாக ஒரு அரசு பதவி ஏற்றுள்ளது. மக்கள் மகத்தான தீர்ப்பு வழங்கி உள்ளனர். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 10 வருட கடின உழைப்பிற்கு மக்கள் அளித்துள்ள விருதுதான் தேர்தல் வெற்றி. ஆனால், சிலர் வேண்டுமென்றே அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் (எதிர்க்கட்சிகள்) பெரும் சத்தத்தை உருவாக்கி நாட்டு மக்களின் இந்த முக்கிய முடிவை மறைக்கப் பார்க்கின்றனர்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் 10 ஆண்டுகால எங்கள் ஆட்சியின் மைல்கல் முத்திரை மட்டுமல்ல, எதிர்கால தீர்மானங்களுக்கு மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதற்கான அத்தாட்சியாகவும் இருந்தது. நாட்டு மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர், எங்கள் மீது மட்டுமே!

தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியை இருட்டடிப்பு செய்ய முயற்சி செய்கின்றனர். தேர்தலில் எதிர்க்கட்சிகளின் தவறான பிரச்சாரத்தை மக்கள் தோற்கடித்து உள்ளனர். தேர்தலில் மக்கள் அளித்த தோல்வியை ஏற்க சில எதிர்க்கட்சிகள் மறுக்கின்றன. எங்களுக்கான வெற்றி மக்களுக்கான சிறந்த எதிர்காலத்தை நிர்மாணிக்கும்.

இந்தியாவின் அரசியல் சாசனத்தை எப்போதும் புனிதமாக கருதுபவன் நான். அரசியல் சாசனம் தான் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு. அரசியலமைப்பு சட்டம் நிறுவப்பட்டதன் 75 வது ஆண்டை கொண்டாடி வருகிறோம். எந்த அரசாக இருந்தாலும் நமது அரசியலமைப்பு கலங்கரை விளக்கம் போல் உதவும். எனது அரசுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்ட புத்தகத்தை சிலர் கையில் வைத்துக் கொண்டு விளம்பரம் தேடிக் கொண்டது ஏன்?

அரசியல் அமைப்பு சட்டத்தை மாணவர்கள் புரிந்து கொண்டு மாணவர்கள் விவாதம் நடத்த வேண்டும் என்பதே எனது நோக்கம். குடியரசு தினம் இருக்கும் போது தனியாக அரசியல் சாசன தினம் ஏன் என எதிர்க்கட்சிகள் கேட்கின்றனர்.

நவம்பர் 26-ம் தேதியை அரசியலமைப்பு தினமாக கொண்டாடுவோம் என்று எங்கள் அரசு மக்களவையில் கூறியபோது, இன்று அரசியலமைப்புச் சட்டத்தின் நகலை எடுத்துக்கொண்டு உலகெங்கும் அலைந்து திரிபவர்கள், ஜனவரி 26-ம் தேதியை அரசியல் சாசனமாக கொண்டாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களின் அந்த செயல் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

மக்கள் கொடுத்த வெற்றியால், இந்திய பொருளாதாரம் 3வது இடத்திற்கு செல்லும். பெருந்தொற்று காலத்திலும் இந்திய பொருளாதாரத்தை 10 வது இடத்தில் இருந்து 5வது இடத்திற்கு முன்னேறி உள்ளோம்.

“ஆட்டோ பைலட்’ மோடில் இந்திய பொருளாதாரம் வளரும் என எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. ஆட்டோ பைலட் முறையிலேயே காங்கிரஸ் ஆட்சி செய்தது. கடந்த 10 ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்து வருகிறோம். அடுத்த 20 ஆண்டுகளுக்கும் பா.ஜ.க. ஆட்சி தான்.

சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்து உள்ளது. ஏழை மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வை மேம்படுத்தி வருகிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் வறுமைக்கு எதிரான போராட்டத்தை அரசு முன்னெடுக்கும். இந்த வளர்ச்சி என்பது ஆரம்ப கட்டம் தான். வறுமைக்கு எதிராக போர் துவக்கி உள்ளோம். இன்னும் பல படிகள் வளரப் போகிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா 3வது வளர்ந்த நாடு என்ற பெருமையை அரசு படைக்கும்.

விவசாயிகளின் தேவைகளை கண்டறிந்து கடந்த 10 ஆண்டுகளில் அவற்றை நிறைவேற்றியுள்ளோம். விவசாயிகளுக்கு உற்ற துணையாக இருக்கிறோம். குறைந்தபட்ச ஆதார விலையை இதுவரை இல்லாத அளவிற்கு பன்மடங்கு அதிகரித்தோம்.

கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் விவசாயத்தை லாபகரமாகவும், விவசாயிகளுக்கு பயனுள்ளதாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்தி பல திட்டங்கள் மூலம் அதை வலுப்படுத்த முயன்றுள்ளோம். ஒரு வகையில் விதை முதல் சந்தை வரை விவசாயிகளுக்கான ஒவ்வொரு அமைப்பையும் மிக நுண்ணிய திட்டமிடலுடன் வலுப்படுத்த எங்களால் முடிந்தவரை முயற்சி செய்து, அமைப்பை வலுப்படுத்தி உள்ளோம்.

உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக நாம் மாறும் போது, இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள அனைத்து அம்சங்களிலும் நிச்சயமாக சாதகமான தாக்கம் ஏற்படும். உலகளாவிய வரைபடத்தில் இந்திய நிறுவனங்கள், ஸ்டார்ட் அப்கள் மற்றும் தொழில்களின் இணையற்ற எழுச்சியை நாங்கள் கற்பனை செய்கிறோம். எங்கள் 3ம் காலாண்டில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் வளர்ச்சி இயந்திரங்களாக பெரும் பங்கு வகிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த நூற்றாண்டு தொழில்நுட்பத்தால் இயங்கும் நூற்றாண்டு! புதிய துறைகளில் புதிய தடங்களை விரைவில் காண்போம். அடுத்த 5 ஆண்டுகளில் பொது போக்குவரத்து துறையை மாற்றுவோம்.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

ராஜ்யசபாவில் பிரதமர் மோடி உரை துவக்கிய சிறிது நிமிடங்களிலேயே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர். காங்கிரஸ் தலைவர் கார்கே எழுந்து, பேச அனுமதிக்கும்படி வலியுறுத்தினார். பிறகு பிரதமர் உரையை புறக்கணித்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஜூலை 03, 2024

# பழனியில் ஆகஸ்ட் 24, 25ந் தேதி நடைபெறவிருக்கும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுப் பணிகள்: அலுவலர்களுக்கு சேகர்பாபு அறிவுரை




சென்னை, 03 ஜூலை 2024: இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் இன்று (3 ந் தேதி) ஆணையர் அலுவலகத்தில், ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டுப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசுகையில், அனைத்துல முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு வருகைதரும் வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் முருக பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தி தருதல், இரண்டு நாள் மாநாட்டின் நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை உறுதிசெய்தல், சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை தேர்வு செய்யும் பணிகள்,

மாநாடு குறித்து நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தும் பணிகள், மாநாட்டு அரங்கங்களின் வடிவமைப்பு மற்றும் அறுபடை வீடு கண்காட்சி அரங்கு தொடர்பான பணிகள், மாநாட்டு வளாகத்தில் ஏற்படுத்தப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், மாநாட்டு விழா மலர் மற்றும் ஆய்வுக் கட்டுரை மலர் தயாரித்தல் போன்ற பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் பி.சந்தரமோகன், அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், ரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், சுகிசிவம், முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார், தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், ந.திருமகள், சி.ஹரிப்ரியா, மா.கவிதா, பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திரமோகன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.62 லட்சம் கடத்தல் தங்கம் பறிமுதல்

சென்னை, 03 ஜூலை 2024: சென்னை விமான நிலையத்தில் ரூ.62 லட்சம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு விமான சேவை இயங்கி வருகிறது. இதனால் தினந்தோறும் பல்லாயிரக்கணக்காேனார் விமான நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். இதனிடையே விமான நிலையத்தில் சமீப காலமாக தங்கம் கடத்தும் செயல்களும் அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், துபாயில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, பயணி ஒருவர் 960 கிராம் தங்கத்தை உள்ளாடைக்குள் மறைத்து கடத்தி வந்தது தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.62 லட்சம் ஆகும்.

இதையடுத்து அந்த பயணியை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே, சென்னை விமான நிலையத்தில் கடந்த 2 மாதங்களில் மட்டும் ரூ.167 கோடி மதிப்புடைய 267 கிலோ தங்கம் கடத்தலில் ஈடுபட்ட சர்வதேச தங்கம் கடத்தும் கும்பலைச் சேர்ந்த 9 பேரை கைது செய்து சென்னை விமான நிலைய சுங்கத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# அண்ணா பல்கலைக்கழகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, 03 ஜூலை 2024: சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும், அது சற்றுநேரத்தில் வெடிக்கும் என்றும் நேற்று இரவு மர்ம நபர் ஒருவர் இ-மெயில் மூலமாக மிரட்டல் விடுத்திருந்தார்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் கோட்டூர்புரம் போலீசார் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு விரைந்து சென்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக வளாகம் முழுவதும் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் போலீசார் சோதனை மேற்கொண்டனர். இதில் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை அது வெறும் புரளி என்பது தெரிய வந்தது.

இந்த வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் யார் என்பது தெரியவில்லை. அவரை கண்டு பிடிக்கும் பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மிரட்டல் இ-மெயில் எந்த முகவரியில் இருந்து அனுப்பப்பட்டு உள்ளது? என்பது பற்றிய விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது. மிரட்டல் விடுத்த வாலிபரை கண்டுபிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

# அப்போலோ ஓ எம் ஆர் மருத்துவமனை மிகவும் சிக்கலான, இதயத்தில் பொருத்தப்பட்ட உறை குழாயை மிகத்துல்லியமாக பிரித்து எடுத்து சாதனை!




சென்னை, 03 ஜூலை 2024: சென்னை அப்போலோ ஓ எம் ஆர் மருத்துவமன, மிகவும் அரிதான மேலும் அதிக ஆபத்துள்ள இன்ட்ராகோரோனரி உறை குழாய் பிரித்தெடுக்கும் மருத்துவ நடைமுறையை வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பதன் மூலம் இதய அறுவை சிகிச்சையில் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்திருக்கிறது. மருத்துவ உலகில் புரட்சியை ஏற்படுத்தும் வகையிலான இந்த அறுவை சிகிச்சையானது, நோயாளிகளுக்கான மருத்துவப் பராமரிப்பில் முன்னோடித்துவமிக்க முன்னேற்றங்களை செயல்படுத்துவதிலும், மிகவும் சிக்கலான சூழ்நிலையில் உள்ள நோயாளிகளுக்கு ஈடுஇணையற்ற மருத்துவ தீர்வுகளை வழங்குவதிலும் அப்போலோ மருத்துவமனை கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

கரோனரி ஸ்டென்ட்கள் எனப்படும் இதய உறை குழாய், பொதுவாக இதய தமனியில் மிக குறைந்தளவு அடைப்புகளைக் கொண்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக உடலினுள் செருகப்படுகின்றன. இது வழக்கமான மருத்துவ நடைமுறை மட்டுமின்றி மிகவும் குறைந்தபட்ச ஆபத்துள்ள ஒன்றாகும். இருப்பினும், இதயத்தில் உண்டாகும் இன்ட்ராகோரோனரி உறை குழாய் தொற்றுகள், மிகவும் அரிதாக ஏற்படுகிறது. இத்தகைய தொற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான சிக்கல்களை உருவாக்குவதோடு, அவர்களது உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைக்கும் வழிவகுக்குகிறது.

இந்த குறிப்பிட்ட 76 வயது நோயாளி, இதற்கு முன்பு மாரடைப்பின் காரணமாக மற்றொரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த மருத்துவமனையில் இவருக்கு அவசர நிலை இன்ட்ரோகரோனரி ஸ்டென்ட் பொருத்தப்பட்டது. இந்த மருத்துவ நடைமுறை முடிந்து அவர் டிஸ்சார்ஜ் ஆன பிறகும், தொடர்ந்து காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். இதனால் இவர் பழைய மகாபலிபுரம் சாலை பெருங்குடியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடனடியாக இவருக்கு ஆரம்பகட்ட மருத்துவ மதிப்பீடுகளை பொது மருத்துவர் கண்ணையன் மற்றும் கன்சல்டன்ட் கார்டியாலஜிஸ்ட் டாக்டர். மதுபிரபுதாஸ் ஆகியோர் மேற்கொண்டனர். அப்போது இந்நோயாளிக்கு இன்ட்ராகோரோனரி ஸ்டென்டில் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்த தொற்று, கரோனரி தமனியை அரித்து, பெருநாடி சுவர் வரை விரிவடையும் அபாயத்துடன் இருப்பதும் தெரிய வந்தது..

நோயாளியின் உடல்நிலையில் இருந்த தீவிரத்தை கண்டறிந்ததும், இருதய அறுவை சிகிச்சை ஆலோசனை மருத்துவர் டாக்டர். எம்.எம். யூசுஃப், கரோனரி ஆர்டரி பைபாஸ் கிராஃப்ட் சர்ஜரியுடன் இன்ட்ராகோரோனரி உறை குழாய் மற்றும் பாதிக்கப்பட்ட அரிப்பை அவசரமாக அகற்றுவதற்காக பன்னோக்கு சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய குழுவை முன்னின்று வழிநடத்தினார். மிகவும் சிக்கலான, ஆபத்து அதிகமுள்ள இந்த மருத்துவ நடைமுறையை மேற்கொள்ள பல்வேறு மருத்துவப்பிரிவு நிபுணர்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. டாக்டர். கல்யாணராமன் (இருதய மயக்க மருந்து நிபுணர், கன்சல்டன்ட்), டாக்டர். செந்தூர்நம்பி (தொற்றுநோய்களின் மருத்துவர், கன்சல்டன்ட்), டாக்டர். பிரதீமா (தீவிர சிகிச்சை மருத்துவர், கன்சல்டன்ட்), மற்றும் டாக்டர். கண்ணையன் மற்றும் டாக்டர். மதுபிரபுதாஸ் ஆகியோர் அடங்கிய மருத்துவர்கள் குழு இந்த சிக்கலான மருத்துவ நடைமுறையை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கிறது.

அப்போலோ மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை ஆலோசகர் டாக்டர் எம். எம். யூசுப் கூறுகையில், "இந்நோயாளிக்கு முதலில் இதய சிடிஸ்கேன் எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு இன்ட்ராகோரோனரி ஸ்டென்டில் தொற்று இருப்பது தெரியவந்தது. நோய்த்தொற்று அவரது இதய தமனியை அரித்து இருந்ததால், அது கிழிந்துப் போகும் சூழல் இருந்தது. மேலும் இதன் பாதிப்பு பெருநாடியின் சுவர் வரை நீளும் அபாயமும் இருப்பது கண்டறியப்பட்டது. அதனால் இந்நோயாளிக்கு மிகவும் அதிக ஆபத்துள்ள, மிகவும் அரிதான மருத்துவ நடைமுறையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும் வயதான நோயாளி என்றால் இன்னும் ஆபத்து அதிகம். உலகளாவிய மருத்துவ தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் மருத்துவ தீர்வுகள் குறித்த பதிவுகளை ஆராய்ந்தறிந்த போது, இது போன்ற நிலைமைகளின் கீழ் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளே அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் அந்த நோயாளிகள் இறக்கும் ஆபத்து 60% -க்கும் அதிகமாக இருப்பதும் தெரிய வந்தது. மிகவும் சிக்கலான இந்த மருத்துவ நடைமுறையில் இருக்கும் அபாயங்கள் மற்றும் நன்மைகள் குறித்து நோயாளி மற்றும் மருத்துவர்களாக இருந்த அவரது குடும்பத்தினருக்கும் முழுமையாக விளக்கி கூறப்பட்டது.'' என்றார்.

அப்போலோ ஓ எம் ஆர் மருத்துவமனையின் மருத்துவத்துறையின் மூத்த ஆலோசகர் டாக்டர் கண்ணையன் கூறுகையில், "இந்த அரிதான மேலும் அதிக ஆபத்துள்ள இந்த மருத்துவ நடைமுறையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி இருப்பது என்பது, எங்களது பல்துறை மருத்துவ குழுவின் ஈடுஇணையற்ற நிபுணத்துவம் மற்றும் கூட்டு முயற்சிகளுக்கு மிகச்சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது. எங்களது நோயாளிக்கும் மிகச்சிறந்த சிகிச்சையையும், நல்ல தீர்வையும் வழங்கியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இதற்காக அப்போலோ மருத்துவமனை வழங்கிய மேம்பட்ட மருத்துவ உள்கட்டமைப்பு மற்றும் பெரும் ஆதரவுக்கு எங்களுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறோம்'' என்றார்.

கிளஸ்டர்-2-ன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மருத்துவ இயக்குநர் டாக்டர். ராகுல் மேனன் கூறுகையில், " ஆழ்ந்த நிபுணத்துவமிக்க, அதிக அக்கறைத் தேவைப்படுகிற இந்த மருத்துவ நடைமுறையானது, அப்போலோ ஓ எம் ஆர் மருத்துவமனைகளில் உள்ள எங்களது மருத்துவக் குழுவின் ஈடுஇணையற்ற திறமைகளையும், அக்கறையையும் அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. இது போன்ற அரிய மற்றும் அதிக ஆபத்துள்ள அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வது, மருத்துவ சிகிச்சைகளில் இருக்கும் எல்லைகளைத் தாண்டி புதிய வரையறையை உருவாக்குவதிலும், நோயாளிகளுக்கு மேம்பட்ட உயரிய சிகிச்சைகளை அளிப்பதிலும் நாங்கள் காட்டும் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு மருத்துவ அணுகுமுறை மற்றும் கூட்டு முயற்சிகளின் மூலம் எங்கள் நோயாளிகளுக்கு நல்ல தீர்வுகளை வழங்கி வருவது, எங்களது அதிநவீன மருத்துவ உள்கட்டமைப்பின் சிறப்பையும், இருதய பராமரிப்பு நிபுணர்களின் நிபுணத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இன்று மேம்பட்ட இதய பராமரிப்பில் நாங்கள் முன்னிலை வகிப்பதை பெருமையாக கருதுகிறோம். மேலும் நோயாளிகளுக்கான பராமரிப்பின் ஒவ்வொரு அம்சத்திலும் சிறப்பாக செயல்பட தொடர்ந்து பாடுபடுவோம்." என்றார்.

நோயாளிக்கு அறுவைசிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை முடிந்த ஆறு வாரங்களுக்குப் பிறகு நோயாளி சகஜநிலைக்குத் திரும்பினார். இந்தச் சாதனை அப்போலோ மருத்துவமனையின் மேம்பட்ட திறன்களையும், உயரிய சுகாதார பராமரிப்பில் காட்டிவரும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# தமிழக அரசின் தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன் மாநில உரிமைகளுக்கு எதிரான 'நீட்' தேர்வு தேவையில்லை: விஜய் பேச்சு கல்வி, சுகாதாரத்தை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும்




சென்னை, 03 ஜூலை 2024: மாநில அரசுகளின் உரிமைகளுக்கு எதிரான நீட் தேர்வு தேவையில்லை என்பது தான் எனது கருத்து என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் நடிகர் விஜய் பேசினார்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற கட்சியை தொடங்கியுள்ளார். கட்சி தொடங்கிய அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 2ம் தேதி விஜய் அதிகார பூர்வமாக அறிவித்தார். கடந்த வருடம் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக முதலிடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் சான்றிதழ்களை நடிகர் விஜய் வழங்கினார். இந்நிலையில், இந்த வருடமும் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு தொகுதி வாரியாக இரண்டு கட்டங்களாக பரிசுகளை வழங்குகிறார்.

முதற்கட்டமாக, கடந்த 28ம் தேதி திருவான்மியூரில் மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது . கோவை, ஈரோடு, மதுரை உள்ளிட்ட 21 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகையை விஜய் வழங்கினார். இந்த நிகழ்வில், 750 மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்பட 3,500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில்,2ம் கட்டமாக இன்று தமிழக வெற்றிக் கழகத்தின் கல்வி விருது வழங்கும் விழா சென்னை திருவான்மியூரில் நடந்தது.

செங்கல்பட்டு, சென்னை, கடலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், காரைக்கால், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுச்சேரி, ராணிப்பேட்டை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருப்பத்தூர், திருச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விஜய் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகையை வழங்குகினார்.

விழாவில் நடிகர் விஜய் கலந்து கொண்டு பேசியதாவது:

'நீட்' தேர்வால் ஏழை, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நீட் தேர்வில் நான் மூன்று முக்கியப் பிரச்சினைகளைக் காண்கிறேன். முதலாவதாக நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கு எதிரானதாக இருக்கிறது. 1975-க்கு முன்னால் கல்வி என்பது மாநில பட்டியலில் தான் இருந்தது. அதன்பிறகு தான் ஒன்றிய அரசின் கீழ் வந்தது. அதை எப்பொழுது ஒன்றிய அரசு பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வந்ததோ அப்போதுதான் இந்த சிக்கல் ஏற்பட்டது. ஒரே நாடு, ஒரே பாடத்திட்டம், ஒரே தேர்வு என்பதை, அடிப்படையில் கல்வி கற்றலுக்கே எதிரான விஷயமாக நான் பார்க்கிறேன். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஏற்றவாறு பாடத்திட்டம் இருக்க வேண்டும். பன்முகத்தன்மை என்பது பலமே தவிர பலவீனம் அல்ல, மாநில பாடத்திட்டத்தில் படித்துவிட்டு என்சிஆர்டி பாடத்திட்டத்தின்படி நடத்தப்படும் தேர்வை எப்படி எல்லோராலும் சமமாக எழுத முடியும். அதுவும் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வை எழுதுவது என்பதை யோசித்துப் பாருங்கள்.

மூன்றாவதாக, நீட் தேர்வு குளறுபடிகள் பற்றி நாம் நிறைய செய்திகளை வாசித்தோம். அதன்மூலம் நீட் தேர்வு மீதான நம்பகத்தன்மையே மக்களுக்குப் போய்விட்டது. நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் ஊடகச் செய்திகள் மூலமாக நாம் புரிந்து கொண்ட விஷயமாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு நீட் விலக்கு மட்டுமே. நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தமிழக அரசு கொண்டு வந்த சட்டப்பேரவை தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஒன்றிய அரசு இதன் மீது காலதாமதம் செய்யாமல் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நீட் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். ஒருவேளை அதில் நடைமுறை சிக்கல் இருந்தால் இடைக்கால தீர்வாக அரசியலமைப்பு சட்டத்தை திருத்தம் கொண்டு வந்து சிறப்புப் பொதுப் பட்டியலை உருவாக்கி, அதில் கல்வி மற்றும் சுகாதாரத்தைச் சேர்க்க வேண்டும். மாநில அரசுகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கும் சிறப்புப் பொதுப் பட்டியலை உருவாக்க வேண்டும் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோள். ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் எய்ம்ஸ், ஜிப்மர், பிஜிஐ போன்ற நிறுவனங்களில் வேண்டுமானால் அவர்கள் நீட் தேர்வை நடத்திக் கொள்ளட்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நீட் விலக்கு தேவை என்பதை எனது பரிந்துரையாகப் பகிர்ந்து கொண்டேன். இது நடக்குமா? நடக்கவிடுவார்களா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. எனது பார்வையைப் பகிர்ந்து கொண்டேன்.

எனவே, மாணவர்களே நீங்கள் மகிழ்ச்சியாகப் படியுங்கள். எந்த அழுத்தத்தையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். இந்த உலகம் மிகப் பெரியது. அதில் நிறைய வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன . ஏதாவது ஒருசில விஷயத்தில் தோற்றால் அதில் முடங்கிவிடாதீர்கள். தோல்வி கண்டால், கடவுள் இன்னும் நிறைய வாய்ப்புகளை உங்களுக்காக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். அது என்னவென்பதைக் கண்டுபிடியுங்கள். நம்பிக்கையுடன் இருங்கள். வெற்றி நிச்சயம். இவ்வாறு விஜய் பேசினார்.

# 80 ஆயிரம் புள்ளிகளை கடந்து இந்திய பங்கு சந்தை புதிய உச்சம்

சென்னை, 03 ஜூலை 2024: சென்செக்ஸ், இதுவரை இல்லாத வகையில் 80 ஆயிரம் புள்ளிகளை கடந்தது. இதேபோல் நிப்டியும் உச்சத்தில் இருக்கிறது.

இந்திய பங்குச்சந்தை கடந்த மாதம் தொடக்கத்தில் கடும் சரிவை சந்தித்தது. குறிப்பாக, நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியான ஜூன் 4ம் தேதி இந்திய பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியடைந்தது. நிப்டி 1000 புள்ளிகள், பேங்க் நிப்டி 2 ஆயிரம் சென்செக்ஸ் 4 ஆயிரம் புள்ளிகள், பேங்க் நிப்டி 5 ஆயிரம் புள்ளிகள் வீழ்ச்சியடைந்தன. இதனால் முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடிகள் நஷ்டம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து ஜூன் 5ம் தேதி முதல் இந்திய பங்குச்சந்தை சரிவில் இருந்து மீளத்தொடங்கியது. தினமும் புதிய உச்சத்தை தொட்டு வருகிறது.

இந்நிலையில், இந்திய பங்குச்சந்தை இன்று புதிய உச்சம் தொட்டுள்ளது. இன்று காலை வர்த்தகம் தொடங்கியது முதலே இந்திய பங்குச்சந்தை ஏற்றத்துடன் உள்ளது.

அதன்படி, நிப்டி 150 புள்ளிகள் அதிகரித்து 24 ஆயிரத்து 307 என்ற புதிய உச்சம் தொட்டு வர்த்தகமாகி வருகிறது. அதேபோல், பேங்க் நிப்டி சுமார் 1000 புள்ளிகள் அதிகரித்து 53 ஆயிரத்து 256 என்ற புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

மேலும் சென்செக்ஸ் சுமார் 600 புள்ளிகள் அதிகரித்து 80 ஆயிரத்து 74 என்ற புதிய உச்சம் தொட்டு வர்த்தகமாகி வருகிறது. எச்டிஎப்சி வங்கியின் பங்குகள் உயர்வு காரணமாக நிப்டியும் உயர்வை சந்தித்தது. பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்குகளும் உயர்வை சந்தித்தன.

இந்திய பங்குச்சந்தை புதிய உச்சம் தொட்டுள்ளதால் முதலீட்டாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (03.07.2024) மாவட்ட அளவிலான நுகர்வோர் மற்றும் விழிப்புணர்வுக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள் உள்ளார்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (02.07.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான பணிக் குழு உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் செல்விபிரேமலதா அவர்கள், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திருமபிரபு அவர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.மடிசன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (03.07.2024) வருவாய்த்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (இஸ்ரோ) திருமதி.மாரிமுத்து அவர்கள், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ம.பிரபு அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (03.07.2024) மாவட்ட அளவிலான நுகர்வோர் மற்றும் விழிப்புணர்வுக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.அஜய் சீனிவாசன் அவர்கள் உள்ளார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன்கிழமை,
ஜூலை 03, 2024

# இந்தியாவின் 45% மின் வாகனங்கள் (ஈ வி) விற்பனை தென்னிந்தியாவில் நிகழ்கிறது: ஆய்வறிக்கை




சென்னை, 03 ஜூலை 2024: இந்தியாவின் மிகப்பெரிய மின் வாகன கண்காட்சி மற்றும் மாநாடான இந்தியா ஈ வி 2024 என்பதன் நான்காவது பதிப்பு ஜுன் 29 மற்றும் 30 தேதிகளில், சென்னை வர்த்தக மையத்தில் மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கிறது. புத்தாக்க தீர்வுகளை கண்டறிவது, பொலிவுறு நகரங்களில் நிலைப்புத்தன்மையுள்ள மின்வாகன ஒருங்கிணைப்பு குறிக்கோளை அடையவும் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வை இணைத்திருக்கின்ற ஒரு எதிர்கால திட்டத்தை உருவாக்குவதும் இந்நிகழ்வின் நோக்கமாகும். இந்நாட்டின் மின்வாகன துறைக்கான இலக்குகள், போக்குகள் மற்றும் கண்ணோட்டத்தை முன்னிலைப்படுத்துகின்ற ஒரு அறிக்கை, இந்தியா ஈ வி 2024 நிகழ்வையொட்டி வெளியிடப்படுகிறது. ஃபிராஸ்ட் & சுல்லிவன் நிறுவனம் தயாரித்திருக்கும் இந்த ஆய்வறிக்கை "இந்திய மின்வாகன சந்தை மீதான மீள்பார்வை: போக்குகள் மற்றும் எதிர்காலத்திற்கான கண்ணோட்டம்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சிட்ராய்ன் மற்றும் ஜியோ - பி பி ஆகியோரின் கூட்டாண்மை ஒத்துழைப்போடு நடைபெறும் இந்தியா ஈ வி 2024 நிகழ்வானது, ஆந்த்ரபிரனார் இந்தியா என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. லூபி மற்றும் ஈ வி லூப்ரிகண்ட் ஆகியவை இந்நிகழ்வின் பிறஸ்பான்சர்களாகும். இத்தொழில்துறையைச் சேர்ந்த மதிப்புமிக்க அமைப்புகள் மற்றும் கனரக தொழிலகங்கள் அமைச்சகம், சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்ற அமைச்சகம், கைடன்ஸ் தமிழ்நாடு, இந்தோ - இத்தாலியன் வர்த்தக சபை ஏ ஆர் ஏ ஐ (இந்திய ஆட்டோமோட்டிவ் ஆராய்ச்சி சங்கம்) மற்றும் ஐ சி ஏ டி (ஆட்டோமோட்டிவ் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மையம்) ஆகியவற்றின் மேலான ஆதரவுடன் இந்நிகழ்வு நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர், இந்நிகழ்வின் தலைமை விருந்தினராக பங்கேற்கிறார். கைடன்ஸ் தமிழ்நாடு அமைப்பின் நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அலுவலர் வி. விஷ்ணு ஐ ஏ எஸ் கௌரவ விருந்தினராக கலந்து கொள்கிறார். ஜியோ பி பி - ன் தலைமை செயல் அலுவலர் ஹரீஷ் மேத்தா, சிட்ராய்ன் இந்தியாவின் பிராண்டு இயக்குனர் சுஷிர் மிஸ்ரா, இந்தோ - இத்தாலியன் வர்த்தக சபையின் தலைவர் டாக்டர். சௌரவ் மெஸெட்டி, ஐஐடி மெட்ராஸ் - ன் பேராசிரியர் டாக்டர். அசோக் ஜுன்ஜுன்வாலா ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு மின்சார வாகனங்களின் எதிர்காலம் குறித்து தங்களது தொலைநோக்கு பார்வைகளையும் மதிப்புமிக்க கருத்தாக்கங்களையும் பகிர்ந்து கொள்ளவிருக்கின்றனர். 2000-க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் இந்த இருநாட்கள் மாநாட்டு நிகழ்வில் 120-க்கும் அதிகமான நிறுவனங்கள் காட்சிப்படுத்துபவர்களாக பங்கேற்கின்றனர். மேலும் 55+ புகழ்பெற்ற பேச்சாளர்களின் உரைகள் 10+ நிபுணத்துவ குழுக்களின் விவாதங்கள், பி2பி வட்டமேஜை நிகழ்வுகள், புதிய தயாரிப்புகளின் அறிமுகங்கள் மற்றும் தொடர்புடைய நபர்களுடன் பிணைப்பை ஏற்படுத்தும் அமர்வுகள் ஆகியவை இந்த மாநாட்டு நிகழ்வின் சிறப்பம்சங்களாக இருக்கும். மாநாட்டின் முதல் நாளன்று மின்வாகனங்கள் துறையில் ஒருங்கிணைப்பு மற்றும் உலகளாவிய விரிவாக்கம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படும். இரண்டாவது நாளன்று, பேட்டரி தயாரிப்பு, செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைப்பு மற்றும் தமிழ்நாட்டின் மின்வாகன தயாரிப்பின் முக்கியத்துவம் மற்றும் முதன்மை நிலை குறித்து விவாதங்களும், கலந்துரையாடலும் நடைபெறும். இம்மாநாட்டின் ஒரு அங்கமாக நடைபெறும் கண்காட்சி நிகழ்வில் விவாதிக்கப்படும் கருத்தாக்கங்களுள், நிதி உதவி, சார்ஜிங் செயல்பாட்டை தரநிலைப்படுத்தல், மின்வாகனங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், செமிகண்டக்டர்கள் கிடைக்கும் நிலை மற்றும் இந்தியாவில் மின்சார போக்குவரத்தின் எதிர்காலம் ஆகியவை இடம்பெறுகின்றன.

# தென்னிந்தியாவின் மிகப்பெரிய சமையல் எண்ணெய் பிராண்டான சன்பியூர் #30இயர்ஸ் ஆப் பியூரிட்டி அண்ட் ஹெல்த் ஐக் கொண்டாடும் இதயத்தைத் தூண்டும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது




சென்னை, 03 ஜூலை 2024: தென்னிந்தியாவின் மிகப்பெரிய சமையல் எண்ணெய் பிராண்டான சன்பியூர், அதன் முதன்மைத் தயாரிப்பான சன்பியூர் சன்பிளவர் ஆயில், இந்தியாவின் ஒரே இயற்கை ரீதியாக சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை மையமாகக் கொண்டு, அதன் சமீபத்திய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. #30இயர்ஸ் ஆப் பியூரிட்டி அண்ட் ஹெல்த் என்ற தலைப்பிலான இந்த பிரச்சாரமானது, ஒரு இளம் ஜோடி பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சியான ஞாயிறு காலையின் சாரத்தை படம்பிடித்து, அவர்களின் அன்றாட மகிழ்ச்சியில் தயாரிப்பின் பங்கை எடுத்துக்காட்டுகிறது. பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் ஊடகங்களில் ஆண்டு முழுவதும், பன்மொழிப் பிரச்சாரம், நமது அன்றாட வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நம்பகமான பிராண்டின் தூய்மையான மற்றும் ஆரோக்கியமான தயாரிப்புகளை இணைப்பதன் மதிப்பை இது வலியுறுத்துகிறது.

ஒரு சூரிய ஒளியின் பின்னணியில் அமைக்கப்பட்ட இந்த விளம்பரத்தில் மாஸ்டர்செஃப் இந்தியா சீசன் 8 இன் வெற்றியாளர் முகமது ஆஷிக் மற்றும் பிரபல தொலைக்காட்சி மற்றும் கன்னட திரைப்பட நடிகையான மேகா எஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதன் கதைக்களம் சன்பியூர் சன்ஃப்ளவர் எண்ணெய்மூலம் சுவையானபரிமாறிக்கொள்கின்றனர். இதற்கிடையில், அவரது மனைவி, நேர்த்தியாக உடையணிந்து, அவரது கவனத்தைத் ஈர்பார், அவரது சமையல் பாராட்டுக்களை மற்றும் அவரது தோற்றத்தைப் பற்றிய கேள்விகளுக்கு பதில்களாக விளங்குகின்றது.

#30இயர்ஸ் ஆப் பியூரிட்டி அண்ட் ஹெல்த் பிரச்சாரம் - கன்னடம், தமிழ், தெலுங்கு, மராத்தி, மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் - தினசரி சமையல் அனுபவங்களை மேம்படுத்துவதில் இரசாயனமற்ற சூரியகாந்தி எண்ணெய்யின் பங்கை வலியுறுத்தி, நிதானமான ஞாயிறு சூழலை சித்தரிப்பதன் மூலம் பார்வையாளர்களை எதிரொலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கணவன் மனைவிக்கு அளித்த கவிதை உறுதிமொழிகள், அவள் மற்றும் அவருக்குப் பிடித்த சமையல் எண்ணெய் ஆகிய இருவரின் மீதும் கொண்ட அன்புடன் பின்னிப் பிணைந்து, ஒரு அழகான தருணத்தில் முடிவடைகிறது, அங்கு தம்பதியினர் தயாரிப்பின் அம்சங்களை பெருமையுடன் வெளிப்படுத்துகிறார்கள் - தூய்மை, இரசாயனங்கள் இல்லாத மற்றும் இயற்கை ரீதியாக சுத்திகரிக்கப்பட்ட உயர் தரம் வாய்ந்த எண்ணெய் இதுவாகும்.

பிரச்சாரத்தைப் பற்றி பேசிய ஸ்ரீதர் வைத்தியநாதன் - சிஓஓ - எம் கே அக்ரோடெக் பிரைவேட் லிமிடெட், "இந்த பிரச்சாரம் சுவை மற்றும் தரத்தின் சரியான கலவையை கொண்டாடுகிறது, ஆனால் ரசாயனமற்ற சூரியகாந்தி எண்ணெயின் நன்மைகளையும் கொண்டாடுகிறது- இது ஒவ்வொரு உணவையும் மேம்படுத்துகிறது மற்றும் பிரதிபலிக்கிறது. பகிரப்பட்ட உணவுகள் மீதான உறவுகளின் அரவணைப்பு மற்றும் நல்லிணக்கம், தொலைக்காட்சி விளம்பரங்கள், டிஜிட்டல் சேனல்கள், செயல்திறன் சந்தைப்படுத்தல், அச்சு மற்றும் வெளிப்புற ஊடகங்கள் போன்றவற்றின் மூலம் பரவலாக்கப்படும். பல்வேறு பார்வையாளர்களை சென்றடைதல் மற்றும் ஈடுபாடு." இதன் முக்கிய அம்சமாகும்.

# சாம்சங் அடுத்த கேலக்ஸி இசட் சீரிஸ் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களுக்கான முன்பதிவை தொடங்குகிறது

கோயம்புத்தூர், 03 ஜூலை 2024: இந்தியாவின் மிகப் பெரிய எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், வாடிக்கையாளர்கள் அதன் அடுத்த கேலக்ஸி இசட் சீரிஸ் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களை முன்பதிவு செய்து, முன்பதிவு மற்றும் சிறப்புச் சலுகைகளுக்குத் தகுதி பெறலாம் என்று தெரிவித்துள்ளது. Samsung.com, Samsung Exclusive Stores, Amazon.in, Flipkart.com மற்றும் இந்தியா முழுவதும் உள்ள முன்னணி சில்லறை விற்பனை நிலையங்களில் 2000 ரூபாய் டோக்கன் தொகையை செலுத்தி அடுத்த கேலக்ஸி இசட் சீரிஸ் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களை வாடிக்கையாளர்கள் முன்பதிவு செய்யலாம். அடுத்த கேலக்ஸி இசட் சீரிஸ் ஸ்மார்ட்போன்களை முன்பதிவு செய்யும் நுகர்வோர், இந்தத் தயாரிப்புகளை வாங்கும் போது ரூபாய் 7000 வரை மதிப்புள்ள பலன்களைப் பெறுவார்கள்.

சாம்சங் சமீபத்தில் தனது அடுத்த தலைமுறை கேலக்ஸி இசட் தொடர் ஸ்மார்ட்போன்கள் மற்றும் சுற்றுச்சூழல் சாதனங்களை ஜூலை 10 அன்று அதன் உலகளாவிய நிகழ்வில் அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்தது. கேலக்ஸி அன்பேக்ட் நிகழ்வு பாரிஸில் நடத்தப்படும் - இங்கு சின்னமான கலாச்சார இணைப்பு மற்றும் தற்போதைய ட்ரெண்ட் மையமானது சரியான பின்னணியாக மாறும். எங்கள் சமீபத்திய அதிநவீன கண்டுபிடிப்புகளின் வெளியீடு, சாம்சங் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. "கேலக்ஸி ஏஐயின் அடுத்த பதிப்பு வரப்போகிறது. கேலக்ஸி ஏ ஐ இன் ஆற்றலைக் கண்டறியத் தயாராகுங்கள், இப்போது சமீபத்திய கேலக்ஸி இசட் தொடர் மற்றும் முழு கேலக்ஸி சுற்றுச்சூழல் அமைப்பிலும் உட்செலுத்தப்பட்டுள்ளது. மொபைல் ஏ ஐ இன் புதிய கட்டத்திற்குள் நுழையும்போது, □□சாத்தியக்கூறுகளின் உலகத்திற்கு தயாராகுங்கள்," என்று நிறுவனம் மேலும் கூறியது.

சாம்சங் இந்தியா அடுத்த சாம்சங் கேலக்ஸி அணியக்கூடிய மற்றும் கேட்கக்கூடிய சாதனங்களுக்கான முன்பதிவை அறிவித்துள்ளது. வாடிக்கையாளர்கள் சாம்சங்கின் அடுத்த கேலக்ஸி சுற்றுச்சூழல் தயாரிப்புகளை டோக்கன் தொகையான ரூ. 1999 உடன் முன்பதிவு செய்யலாம் மற்றும் இந்தத் தயாரிப்புகளை வாங்கினால் ரூ. 6499 வரை மதிப்புள்ள பலன்களைப் பெறலாம்.

ஆய்வாளர்களின் கூற்றுப்படி, முற்றிலும் புதிய மற்றும் தனித்துவமான ஏ ஐ அனுபவத்தை வழங்க, வரவிருக்கும் மடிக்கக்கூடிய சாதனங்களுக்கு கேலக்ஸி ஏ ஐ அனுபவத்தை சாம்சங் மேம்படுத்தும்.

# யூ-டியூப் இசை தளத்தில் அகில இந்திய அளவில் முதல் இரண்டு இடங்களில் கோட் - இந்தியன் 2 இரண்டு பாடல்களையும் எழுதியவர் கபிலன்வைரமுத்து






**சென்னை, 03 ஜூலை 2024: நடிகர் விஜய் நடிப்பில் வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகிவரும் திரைப்படம் கோட். இந்த படத்தின் இரண்டாவது பாடலாக சின்ன சின்ன கண்கள் என்ற பாடல் கடந்த வாரம் வெளியானது. பவதாரணியின் செயற்கை நுண்ணறிவு குரல் இதில் பயன்படுத்தப்பட்டது. நடிகர் விஜயும் பவதாரணியும் பாடிய இந்த பாடலுக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார். நீண்ட நாட்களுக்கு பிறகு மனதை வருடும் இதமான பாடல் என்று இசை ரசிகர்கள் இதை கொண்டாடி வருகிறார்கள். தற்போது ஷங்கர் இயக்கத்தில் கமலஹாசன் நடிக்கும் இந்தியன் 2 திரைப்படத்தில் இருந்து நீணீறீமீஸீபீணீக்ஷீ ஷீஸீரீ என்ற பாடல் வெளியாகியிருக்கிறது. முன்னாள் உலக அழகி டெமி இதில் நடனமாடியிருக்கிறார். அனிருத் இசை அமைத்திருக்கிறார். இந்த இரண்டு பாடல்களும் யூடியூப் அகில இந்திய இசை வரிசையில் முதல் இரண்டு இடத்தில் இடம் பிடித்திருக்கிறது. இந்த இரண்டு பாடலையும் எழுதியவர் எழுத்தாளரும் பாடலாசிரியருமான கபிலன்வைரமுத்து. இந்தியன் 2 திரைப்படத்தில் கபிலன்வைரமுத்து வசனமும் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.**